**கேகாலை நகர சபை**
**கேகாலை மாவட்டம்**

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 ஜுன் 08 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 ஆகஸ்ட் 26 மற்றும் விரிவான கணக்காய்வு முகாமைத்துவ அறிக்கை 2020 செப்டம்பர் 03 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் கேகாலை நகர சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காணி மற்றும் கட்டிட மீள்மதிப்பீட்டின் போது புத்தகப் பெறுமதி அதிகரிப்பு ரூபா 3,056,651,842 மற்றும் புதிதாக இனங்காணப்பட்ட பெறுமதி ரூபா 604,641,000 ஆனதில் அதிகரித்த மொத்த மீள்மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 3,661,292,842 ஆன போதும், அது ரூபா 3,595,439,830 என கணக்கீடு செய்யப்பட்டுள்ளதால் நிதி நிலைமை கூற்றில் காணி மற்றும் கட்டிடங்கள் ரூபா 65,853,012 இனால் குறைத்து காட்டப்பட்டிருந்தது. | மீள்மதிப்பீட்டு பெறுமதியை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | அனைத்து நிலையான சொத்துகளின் விபரங்களையும் சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | சபைக்கு சொந்தமான 44 குத்தகை ஆதனங்களிற்குரிய காணி 2.76 ஏக்கர்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்திருக்கவில்லை. | அனைத்து நடைமுறையல்லாத சொத்துக்களையும் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான ஆதனங்களை மதிப்பிட்டு எதிர்காலத்தில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதி திகதியன்று மோடார் வண்டி மற்றும் மாட்டு வண்டிக் கணக்கு மீதி ரூபா 978,803 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | பயன்பாட்டிலிருந்து அகற்றிய போதும், பராதீனம் செய்யும் வரை பெறுமதிகளை அகற்றக் கூடாது. | 2020 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் வீதவரிக்காக வழங்கப்பட்ட கழிவு ரூபா 374,014 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்ட கழிவுகளை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (உ) | மீளாய்வாண்டிற்காக பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 93,904 தொகை குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | ஆண்டிற்கான வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஊ) | கடன்கொடுனர் மிகை ஏற்பாடு ரூபா 2,455,772 தொகைக்காக குறித்த சீராக்கம் செய்யப்படாததால் மீளாய்வாண்டு இறுதித் திகதியில் கடன்கொடுனர் அத்தொகையால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | கடன்கொடுனர் மிகை ஏற்பாடிற்கான குறித்த சீராக்கத்தை சரியாக மேற்கொள்ள வேண்டும். | 2020 ஆண்டு இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டு இறுதியில் 06 கணக்கு விடயங்களிற்குரிய நிதிக்கூற்றுக்களின் மீதிகள் மற்றும் உபயோக பதிவேடு பிரகார மீதிகளிற்கிடையில் கூடடுத் தொகை ரூபா 34,931,358 ஆன வித்தியாசம் காணப்பட்டது. | உரிய மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | உரிய மீதிகளின் வித்தியாசத்தை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 1.4 இணங்காமை

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு** | **இணங்காமை** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|---|
| 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | சபைக்கு சொந்தமான 16 வாகங்களின் எரி பொருள் பரிசீரனை மேற்கொண்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எரி பொருள் பரிசீரனை மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்வதாக அறிவிக்கிறேன். |

### 1.4.2 வரி தேவைப்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு அரசிறைச் சட்டத்தின் ஊழிய வருமானத்தின் கீழ் உழைக்கும் போது வரி செலுத்துதல் 7 ஆம் அட்டவணை பிரகாரம் நகர சபை அங்கத்தவர்கள் எனும் வகையில் செயற்பட்ட 03 அலுவலர்களுக்கு மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஆண்டினுள் செலுத்தப்பட்டிருந்த அங்கத்துவ கொடுப்பனவு ரூபா 1,266,746 தொகை தொடர்பாக உழைக்கும் போது செலுத்தும் வரி ரூபா 126,675 அறவிடப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதர்காலத்தில் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 81,870,582 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,369,260 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 13,100,000 | 12,033,434 | 13,069,077 | 2,062,606 | 11,650,000 | 11,929,495 | 12,351,605 | 2,733,928 |
| வாடகை | 46,453,180 | 49,770,578 | 49,647,942 | 3,991,322 | 42,686,600 | 42,816,095 | 42,801,902 | 3,853,232 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,095,500 | 3,307,174 | 3,343,515 | 373,700 | 2,695,500 | 3,614,568 | 3,675,648 | 412,040 |
| ஏனைய வருமானம | 41,729,000 | 55,002,030 | 61,661,097 | 24,200,234 | 116,737,953 | 116,273,133 | 123,618,300 | 27,583,559 |

#### 2.2.2 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியில் நிலுவை வீதவரி மீதி ரூபா 1,997,165 ஆனதுடன் அவற்றில் ரூபா 1,066,108 தொகை ஓராண்டை விஞ்சிய காலமாக நிலுவையாக இருந்த மீதியாகும். அந்நிலுவை மீதியை அறவிடுவது தொடர்பாக நகர சபை கட்டளை சட்டம் 170 பிரிவு பிகாரம் நடவடிக்கை எடுத்தருக்கவில்லை. | நகர சபை கட்டளை சட்டம் 170 பிரிவு பிகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை தொகையை மேலும் குறைத்துக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

#### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓராண்டை விஞ்சிய காலமாக நிலுவையாக காணப்படும் ரூபா 1,299,063 ஆன வாடகை மற்றும் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வாடகை மற்றும் கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | சந்தை வாடகை, வாராந்த சந்தை வாடகை, வாடிவீட்டு வாடகை மற்றும் மலசல கூட கட்டணத்தை பதிவழிக்கும் கட்டளையை பெற்றுக் கொள்ள சபையின் அனுமதிக்கு முன்வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

#### 2.2.4 ஏனைய வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஓராண்டை விஞ்சிய காலமாக நிலுவையாக காணப்டும் நடைபாதை கடை தண்டப்பணம் ரூபா 2,055,639 இனை அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தண்டப்பணம் அறவிடல் தொடர்பாக தாமதமின்றி நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடை வாடகை அறவிடும் போது எஞ்சிய தண்டப்பணத்துடன் அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

நகர சபை கட்டளைச் சட்டத்தின் 04 ஆம் பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர சபை கட்டளை சட்டத்தின் 157 பிரிவு பிரகாரம் சபரகமுவ பிரதான அமைச்சு மூலம் பொது சுகாதாரம் தொடர்பாக தொகுத்து அனுப்பப்பட்டுள்ள 16 உப விதிகளில் நகர சபைக்கு உரிய 12 உப விதிகளை அங்கீகரித்து வர்தமாணியில் பிரசுறித்து வருமானம் அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | உப விதிகளை அங்கீகரித்து வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அவ் உப விதிகளை அங்கீகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அறிவிக்கிறேன். |

(ஆ) செயல் நடவடிக்கை திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (i) | வருடாந்த செயல் நடவடிக்கை திட்டத்தினுள் ஆண்டினுள் மேற்கொள்ள எதிர்பாக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள், வழங்கற் சேவைகள் மற்றும் ஏனைய விடயங்கள் எதுவும் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகள், வழங்கற் சேவைகள் மற்றும் ஏனைய விடயங்களை உள்ளடக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ii) | செயலாற்றல் அறிக்கையின் இணக்கப்பாட்டு அறிக்கை பிரகாரம் ஆதனங்களை மதிப்பிடல், வாகன பராதீனம் செய்தல், அங்கீகார ஆளணி எல்லையினுள் ஆட்சேர்த்து பொடுப்பனவு செய்தல், நிறுவன தகவல்களை இணையத்தளத்தின் ஊடாக வழங்குதல், பிரசைகள் விஞ்ஞாபனத்தை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மதிப்பீட்டிற்காக முறைமை ஒன்றை தயாரித்தல் மற்றும் மனிதவள திட்டத்தை உருவாக்குதல் போன்ற விடயங்கள் மீளாய்வாண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்தம் மேற்கொள்ள வேண்டிய விடயங்களை செயற்படுத்த பொறுப்பேற்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | செயலாற்றல் அறிக்கையின் செயல் நடவடிக்கை திட்ட அடிப்படையில் நிறுவனத்தின் செயலாற்றல் குறிகாட்டி தயாரிக்கப்படாததால் எதிர்பார்த்த விளைவு மட்டங்களின் செயலாற்றலை மதிப்பீடு செய்ய முடியவில்லை. | செயல் நடவடிக்கை திட்டம் பிரகாரம் செயலாற்றல் முன்வைக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**(இ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கொம்போஸ்ட் உற்பத்தி கருத்திட்டத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் விநியோகிக்கப்பட்டுள்ள அனுமதிப்பத்திரம் 2019 ஒக்டோபர் 18 திகதி காலாவதியாகி இருந்த போதும், காலாவதியாக 03 மாதங்களிற்கு முன்னர் புதிப்பிக்கும் விண்ணப்ப படிவத்தினை முன்வைக்க சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. கொம்போஸ்ட் உற்பத்தி கருத்திட்டத்திற்காக மாத்திரம் குறித்த அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டுள்ள போதும், அப் பிரதேசத்திற்கே மல சல கழிவுகள் வெளியிடலும் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருந்தது. | காலாவதியாக 03 மாதங்களிற்கு முன்னர் புதிப்பிக்கும் விண்ணப்ப படிவத்தினை சமர்பிக்க வேண்டும். | குவியல் முறையினூடாக இயற்கை பசளை உற்பத்தி முறைமைக்காக பெற்றிருந்த சுற்றாடல் காப்பு அனுமதிப்பத்திரம் காலாவதியான போதும், கவஷிமா இயற்கை பசளை உற்பத்தி முறைமைக்கு இணங்க வேண்டியுள்ளதால் புதிய அனுமதிப்பத்திரம் ஒன்றை பெற்றுக் கொள்ள வேண்டுமென அறிவிக்கிறேன். |

## 3.2 முகாமைத்துவ பலவீனங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2017 ஆகஸ்ட 16 திகதி மற்றும் 04/2017 ஆம் இலக்க மாகாண திறைசேரி சுற்றறிக்கையின் 3.1(i) இ பந்தி பிரகாரம் காணி மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பிட 02 குழுக்கள் 2019 நவம்பர் 26 திகதி நியமிக்கப்பட்டிருந்த போதும் மதிப்பீட்டு அறிகையை பூரணப்படுத்தி முன்வைத்திருக்கவில்லை. பூரணப்படுத்தாத அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு மீள் மதிப்பீட்டு பெறுமதிகள் நிதிக் கூற்றுக்களிற்கு உள்ளடக்கப்பட்டிருந்தது. | மதிப்பீட்டு அறிக்கையை உரிய முறைப்படி பூரணப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்களை மீள்மதிப்பீடு செய்ய உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதுடன் எதிர்காலத்தில் மதிப்பீட்டு அறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சபைக்கு சொந்தமான 37 கிணறுகளில் 10 இனை அளவை செய்திருக்காததுடன் 07 கிணறுகள் திருத்த வேண்டிய நிலையில் காணப்பட்டன. அவ்வாறே 17 கிணறுகள் பாவனைக்கு எடுக்காது கைவிடப்பட்டிருந்ததுடன் 02 கிணறுகளை பௌதீக ரீதியாக கண்டறிய முடியாதிருந்தது. | சொத்துக்களை பராமரிக்க மற்றும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபைக்கு சொந்தமான அனைத்து சொத்துக்களிற்குரிய அளவை நடவடிக்கை திருத்த வேளை போன்ற எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படுவதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 03 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலத்திலிருந்து நிலவி வரும் கூட்டுத்தொகை ரூபா 5,507,591 ஆன கடன்கொடுனர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கடன்கொடுனர் மீதியை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபை செயலாளர், கணக்காளர், பொது சுகாதார பரிசோதகர், மின் தொழிநுட்பவியலாளர் மற்றும் ஆயுர்வேத மருந்து கலவையாளர் ஆகிய பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுவதால் வினைத்திறனான பொது மக்கள் சேவையை வழங்குவது தொடர்பில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடுமென அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஆளணி வெற்றிடங்கள் தொடர்பான தகவல்கள் மாதந்தம் உயர் முகாமைத்துவத்திற்கு சமர்பித்த போதும் மாகாண சபையிலிருந்து அதற்கான தீர்வு கிடைக்கவில்லை. |
| (ஆ) | 15 ஆண்டுகளிற்கு விஞ்சிய காலமாக நிலவிவரும் மரணித்த, ஓய்வு பெற்ற, சேவையை விட்டுச் சென்ற மற்றும் சேவை இடை நிருத்தப்பட்ட 18 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 85,618 இனை அறவிட அல்லது தாபன விதிக்கோவை 4.3, 4.4, 4.5 மற்றும் 4.6 இன் ஏற்பாடுகள் பிரகாரம் செயற்பட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | தாபன விதிக்கோவை 4.3, 4.4, 4.5 மற்றும் 4.6 இன் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவை கடன் தொகையை விரைவில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

3.4.1 விளைவற்ற சொத்தக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 1,320,000 ஆன 02 வாகனங்கள் ஒரு வருட காலத்தை விஞ்சிய காலமாக விளைவற்று நிலவியன. | பழுதுபார்த்து பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | இந்த வாகனங்கள் திருத்த வேலைகளிற்காக அனுப்பப்பட உள்ளதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |

3.4.2 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 வருட காலமாக பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டுள்ள ரூபா 978,803 ஆன 05 வாகனங்களை ஏலவிற்பனை செய்ய 2018 ஜுலை 06 திகதி இடம்பெற்ற மகா சபையில் தீர்மானிக்கப்பட்டு இருந்ததுடன் அவ்வாகனங்களை மதிப்பிட்டு விலைகளை சபைக்கு சமர்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. உள்ளூராட்சி ஆணையாளரின் இலக்கம் சீஎல்ஜீ/10/7/1 மற்றும் 2019 ஆகஸ்ட் 15 திகதிய கடிதம் மூலம் மதிப்பீட்டுச் சபை நியமிக்கப்பட்டிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரை முன் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | மதிப்பீட்டுப் பெறுமதியை பெற்று பராதீன நடவடிக்கைகளை விரைவுபடுத்த முயற்சி எடுக்க வேண்டும். | பாவனையிலிருந்து அகற்றிய வாகனங்களை பகிரங்க ஏலவிற்பனையில் விற்பதற்காக அவற்றின் பெறுமதியை மதிப்பிட்டுத் தருமாறு அறிவித்து கேகாலை மோடார் வாகன பரிசோதகரிற்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் முன் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

3.5 பெறுகைகள்

பெறுகைகள் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2006 அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 (அ), (ஆ) பிரகாரம் நகர சபையினால் பிரதான பெறுகைகள் திட்டமொன்று, அதன் 4.2 (இ) பிரகாரம் எதிர் வரும் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டமொன்றை விரிவாக தயாரித்திருக்காததுடன், மீளாய்வாண்டினுள் ரூபா 29,405,377 ஆன கைத்தொழில், வழங்கல் மற்றும் சேவைகள் பெறுகைகள் திட்டமொன்று இல்லாது மேற்கொள்ளப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். | 2021 ஆண்டிற்காக கைத்தொழில் மற்றும் வழங்கல் சேவைகளை உள்ளடக்கி முறையான பெறுகைகள் திட்டமொன்றை தயாரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஜனவரி 12 திகதிய DMA/01-2019 ஆம் இலக்க கணக்காய்வு முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம் ஓராண்டிற்கு 04 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட வேண்டிய போதும் மீளாய்வாண்டில் 01 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டம் நடாத்தவுள்ளதாக அறிவிக்கிறேன். |

### 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2012 ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்களில் காட்டப்படும் தொங்கல் கணக்கின் செலவு மீதி ரூபா 3,657 இனை தீர்க்க நடவடிக்கை எடுத்தருக்கவில்லை. | தொங்கல் கணக்கை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | தொங்கல் கணக்கை விரைவில் சரிசெய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | பழைய வாராந்த சந்தையின் 52 கடைகளிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,532,780 தொகையை கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கை செய்யாததால் அறவிட முடியாததன் காரணமாக பதிவழிக்க நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பதாக அவதானிக்கப்பட்டது. | சட்ட ரீதியான ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அறவிட முடியாத தொகைக்கு பதிவழிவுக் கட்டளையை பெற்றுக் கொள்ள 2015 ஜுன் 15 திகதி சபை தீர்மானம் மூலம் உரிய அங்கீகாரத்தை கோரியிருந்த போதும், இது வரை அதற்குரிய தீர்மானம் கிடைக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நகர சபை கட்டளை சட்டத்தின் 255 ஆம் அதிகாரத்தின் 160 பிரிவின் பிரகாரம் நகர சபை ஒன்றினால் நகரினுள் அமைந்துள்ள ஏதேனும் அசையா சொத்துக்கள் அல்லது ஏதேனும் திட்டவட்டமான சொத்து வகையிற்கு வருடாந்த மதிப்பீட்டின் பிரகாரம் வீதவரியொன்றை விதித்து அறவிட வேண்டிய போதும் 2009 ஆண்டின் பின்னர் வருடாந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நகர சபை கட்டளை சட்டத்தின் 255 ஆம் அதிகாரத்தின் 160 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வீதவரி சொத்துக்களை மதிப்பீடு செய்ய 2014 ஆண்டு முதல் இது வரை பல சந்தர்ப்பங்களில் அறிவித்துள்ள போதும், இது வரை மதிப்பீட்டுத் திணைக்களம் செயற்பட்டு இல்லாதமை நகர சபையின் பலவீனம் இல்லை என அறிவிக்கிறேன். |